Registered as a Newspaper

பக்கங்கள் - 12

விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 300

சனிக்கிழமை
21 செப்ரெம்பர் 2024

புரட்டாதி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"எல்லாரும் மறக்காம உங்கட வாக்குரிமையை செய்து போடுங்கோ"

அடுத்த ஜனாதிபதி யார்?




# தேர்தல் இன்று!

**கொழும்பு, செப்ரெம்பர் 21**

**ஸ்ரீலங்காவின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தீர்மானிக்கப்போகும் தேர்தல் இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.**

11



படங்கள்: சிவசாந்தன்.



## தியாகதீபம் திலீபனுக்கு நினைவுச் சதுக்கம்

### நல்லூரில் நேற்றுத் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், செப். 21

தியாகதீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு 'பார்த்திபன் தீலீபனாக! திலீபன் தியாக தீபமாக' எனும் தொனிப் பொருளுடனான ஆவணக் காட்சியகத்தைக் கொண்ட தியாகதீபம் திலீபன் நினைவுச்

11

## எதையும் எதிர்கொள்ள முப்படைகளும் தயார்!

கொழும்பு, செப். 21

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு, முப்படைகளும் தயார்நிலையில் உள்ளதாக பொதுப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

11

## உத்தியோகபூர்வமற்ற முடிவுகளை வெளியிடுவதைத் தவிர்க்குக

### தேர்தல்கள் ஆணையம் அறிவிப்பு

கொழும்பு. செப்.21

ஜனாதிபதித் தேர்தலின் போது உத்தியோகபூர்வ முடிவுகள் வெளியாகும் வரை உத்தியோகபூர்வமற்ற முடிவுகளை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

11

## கட்சி தாவியவர்கள் மூவர் பெரமுனவிலிருந்து நீக்கம்!

கொழும்பு. செப் 20

பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களான பவித்ரா வன்னியராச்சி, ரோஹித அபேகுணவர்த்தன, எஸ்.எம். சந்திரசேன ஆகியோர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பதற்குப் பதிலாக, பிறிதொருவரை ஆதரித்ததையடுத்தே அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையாக அனைவரும் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். (அ-ம-44)



## உதயனிடம் 1,000 கோடி ரூபா கோரி டக்ளஸ் தொடுத்த வழக்கு தள்ளுபடி

### ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் சட்டவாதத்துக்கு நேற்றுப் பெருவெற்றி

யாழ்ப்பாணம், செப். 21

உதயனிடம் ஆயிரம் கோடி ரூபா இழப்பீடு கோரி, ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தொடுத்திருந்த வழக்கு நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு விக்கி லீக்ஸ் தளத்தில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மனிதப் படுகொலைகள், ஆட்கடத்தல்கள் என்பவற்றுடன் தொடர்புபட்டவர் என்பதாக வெளியான செய்தியை அடிப்படையாக வைத்து உதயன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்திகள் தனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திவிட்டதாகத் தெரிவித்து ஆயிரம் கோடி ரூபா இழப்பீடு கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். இந்த வழக்கில் உதயனின்

11



Reuters

With eyes on economy, Sri Lankans to vote for president in tight election




## ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் சர்வதேச ஊடகங்கள் கவனம்!

கொழும்பு, செப். 21

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு சர்வதேச ஊடகங்கள் பலவும் தமது சிறப்புக் கண்காணிப்பையும், கவனத்தையும் வெளிப்படுத்தும் விதமாக செய்திகளை வெளியிட்டுள்ளன.

11

## நாட்டைவிட்டு நேற்று வெளியேறினார் பஸில்

### நாமலின் குடும்பமும் புறப்பாடு

கொழும்பு. செப். 21

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகத் தலைவரான பஸில் ராஜபக்ச, நேற்றுக் காலை நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து டுபாய் நோக்கி அவர் பயணமாகியுள்ளதாகவும், அங்கிருந்து அமெரிக்கா நோக்கி அவர் பயணப்படுவார் என்றும் பெரமுனக் கட்சியினர் அறிவித்துள்ளனர்.

11

## மருத்துவத்துக்காகவே சென்றாராம் பஸில்

### விரைவில் நாடு திரும்புவார் என்றும் பெரமுன அறிவிப்பு

கொழும்பு. செப். 21

பஸில் ராஜபக்ச நேற்று நாட்டைவிட்டு வெளியேறியுள்ள நிலையில், அவர் மருத்துவத் தேவைக்காகவே சென்றுள்ளார் என்றும் விரைவில் நாட்டுக்குத் திரும்புவார் எனவும் பெரமுன அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் மேலும் தெரிவித்ததாவது:-

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணம் தேர்தலுக்குத் தயார்

## வாக்குச்சாவடிகளுக்கும் வாக்குப்பெட்டிகளுக்கும் பொலிஸார் பாதுகாப்பு

யாழ்ப்பாணம். செப். 21

**நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் இன்று காலை முதல் இடம்பெறவுள்ளது. அந்தவகையில் வடக்கு மாகாணத்துக்கான அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் நேற்றுக் காலை அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.**

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வாக்கு எண்ணும் நிலையமான யாழ். மத்திய கல்லூரியிலிருந்து வாக்குப் பெட்டிகள் நேற்றுக்காலை கொண்டு செல்லப்பட்டன. 511 வாக்குச் சாவடிகளுக்குரிய பெட்டிகள் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் இ.கி.அமல்ராஜ் ஆகியோர் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.



படம்: ஐ.சிவசாந்தன்

### கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் 2024 இற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 108 வாக்களிப்பு நிலையங்களும், எட்டு வாக்கு எண்ணும் நிலையங்களும் காணப்படுகின்றன என்று பதில் மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பு கடமைகளுக்காக 400 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 907 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 40பேருந்துகளில் வாக்குக் பெட்டிகள் உரிய வாக்களிப்பு நிலையங்களுக்கு பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

### வவுனியா

வவுனியா மாவட்டத்தில் 152 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறித்த நிலையங்களுக்கான வாக்குப்பெட்டிகள் அனைத்தும் நேற்று காலை 7 மணிமுதல் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தின் வாக்கெண்ணும் மத்திய நிலையமாக செயற்பட்டுவரும் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இருந்து குறித்த வாக்குப்பெட்டிகள் அனைத்தும் வாக்களிப்பு நிலையங்களிற்கு பொலிஸாரின் பாதுகாப்புடன் பேருந்துகளின் மூலம் எடுத்துச்செல்லப்பட்டன. வவுனியாவில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 585 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன் தேர்தல் கடமைகளுக்காக பொலிஸார் உட்பட 2 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான 137 வாக்களிப்பு நிலையங்களுக்குரிய வாக்குப் பெட்டிகள் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 86,889 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில் அவர்கள் வாக்களிப்பதற்குரிய 137 நிலையங்க ளுக்கும் காலை 7 மணி முதல் வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்காக 1506 அரச உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளதுடன் 500 பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

### மன்னார்

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று காலை இடம்பெறவுள்ளது. மன்னார் மாவட்டத்தில் 98 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் வாக்கெண்ணும் மத்திய நிலையமாக செயற்பட்டு வரும் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இருந்து குறித்த வாக்குப்பெட்டிகள் அனைத்தும் வாக்களிப்பு நிலையங்களுக்கு பொலிஸாரின் பாதுகாப்புடன் பேருந்துகளின் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன. மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (ச-110,27,213,56, 113)



# தேர்தல் பாதுகாப்பு; ஜனாதிபதி பணிப்பு

முல்லைத்தீவு. செப். 21

எதிர்வரும் 2024 ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு அவசியமான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் தேசிய பாதுகாப்புச் சபை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் கூடி ஆராய்ந்தது.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுதல், வேட்பாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்தல், வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணும் நிலையங்களை அண்டிய பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்துதல் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் என்பன குறித்த நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்புத் தரப்புப் பிரதானிகளுக்கு பணிப்புரை விடுத்தார். (ச)

# 5,000+ முறைப்பாடுகள்

கொழும்பு, செப். 21

இன்று 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 5,214 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 1,656 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 3,415 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேலும், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 33 முறைப்பாடுகளும், தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு ஒரு முறைப்பாடும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு ஏனைய விடயங்கள் தொடர்பில் 109 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ச)

# தேர்தல் பதிவுகள் உடன் நீக்கவும்!

கொழும்பு, செப். 21

2024 ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் சட்டங்களை மீறியதற்காக சமூக ஊடகத் தளங்களில் இருந்து இதுவரை 800 க்கும் மேற்பட்ட இடுகைகளை நீக்குமாறு தேர்தல் ஆணைக்குழு கோரியுள்ளது.

இந்த விதிமீறல்கள் குறித்து முழுமையான விசாரணைக்குப் பின்னர் மெட்டா, யூடியூப், டிக்டொக் மற்றும் கூகுள் போன்ற தளங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பதிவுசெய்யப்பட்ட முறைப்பாடுகளில், 121 இணைப்புகள் சமூக ஊடகங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளன, அதேநேரத்தில் 116 இணைப்புகள் தளங்களால் அகற்றப்படவில்லை,

500 மேலதிக இணைப்புகள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு சமூக ஊடக நிறுவனங்கள் இன்னும் பதிலளிக்கவில்லை என்றும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிக்க வருவோரை பொறுப்போடு கையாள்க

## தேர்தல்கள் பணியாளர்களுக்கு விசேட அறிவிப்பு

**கொழும்பு. செப். 21**

**ஜனாதிபதித் தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து அரச அதிகாரிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு விசேட அறிவித்தலை விடுத்துள்ளது.**

அந்த அறிவிப்பில், குறிப்பாக வாக்குப்பதிவின் போது, வாக்காளர்கள் மற்றும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் அரச அதிகாரிகள் கனிவாகப் பழகவேண்டும். அவர்களைக் கையாள்வதில், அர்த்தமுள்ளதாகவும், கனிவாகவும், பொறுமையாகவும் செயற்படுங்கள். யாருக்கும் சிறப்புச் சலுகை அளிக்கக் கூடாது. உங்கள் கடமை பாரபட்சமற்ற தன்மையாக இருக்கவேண்டும். சுதந்திரமான மற்றும் நியாயமான சூழலில் தங்கள் மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் வாய்ப்பு பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ச)

# வாக்களிப்பதற்கு வசதியாக வில்பத்து வீதியைத் திறவுங்கள்

மன்னார், செப்.21

மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வசித்து வரும் முஸ்லிம் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக வில்பத்து சரணாலயத்தை ஊடறுத்துச்செல்லும் வீதியை திறந்து விடுமாறு உயரதிகாரிகள் தமக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக வன உயிரிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதியால் சரணாலயத்திலுள்ள விலங்குகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து உயர்நீதிமன்றம் வீதியைத் தடை செய்துள்ளது. நீதிமன்ற உத்தரவை மீறி வீதியை திறந்துவிட முடியாது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-25-6)

# வெளிநாட்டு மாணவர் உள்ளீர்ப்பு மட்டுப்பாடு

## கனடா அரசு அறிவிப்பு

றொறண்டோ. செப் 21

வெளிநாட்டு மாணவர்களை உள்ளீர்க்கும் வீதத்தை மேலும் குறைக்கவுள்ளதாக கனடா அரசு அறிவித்துள்ளது. கனேடிய அரசாங்கத்தின் திட்டத்தின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டில் வேறு நாட்டு மாணவர்களை உள்வாங்கும் வீதம் 10 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 36 வீத விழுக்காட்டை இது காட்டுகிறது. வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் நாட்டிலே தற்காலிகமாக தங்கியிருப்பதால் ஏற்படும் சனத்தொகை நெருக்கடியை குறைப்பதற்காகவே இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. கனடாவில் வேலைவாய்ப்புப் பெற்றுக் கொள்வதற்கான விசா தொடர்பான சட்டங்களையும் இனி இறுக்கமாக்கப்போவதாக கனடா அரசு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-25, சி)





# கட்டுப்பாட்டை இழந்து மோ.சைக்கிள் விபத்து

## இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப் . 21

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலி உள் வீதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதி மைல்கல்லுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகரயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த விபத்து நேற்று முன்தினம் நடந்துள்ளது. விபத்தில் முகமாலையைச் சேர்ந்த 34 மற்றும் 25 வயதுடைய இளைஞர்களே படுகாயமடைந்தநிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பாக பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-22,113)

# 15 - 18 காலப்பகுதியில் 802 முறைப்பாடுகள்

கொழும்பு. செப் .21

கடந்த 15-18 திகதிகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தேர்தல் விதிகளுக்கு முரணான சமூக ஊடகப்பதிவுகள் தொடர்பாக 802 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். தமக்குக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பான பதிவுகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை நீக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சமூக ஊடகங்களில் 18 ஆம் திகதிக்குப் பின்னர் இடப்படும் பதிவுகளும் நீக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

# இரு வாக்காளர்களுக்காக ஒரு வாக்களிப்பு நிலையம்

கொழும்பு, செப்.21

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு வாக்காளர்களுக்காக ஒரு வாக்களிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 449,606 பேர் வாக்களிப்பதற்காக 442 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குட்பட்ட மாந்தீவு தொழுநோய் மருத்துவமனையில் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வந்த 2 நோயாளர்களுக்காக மாந்தீவிலேயே விசேட வாக்களிப்பு நிலையம் நிறுவப்பட்டுள்ளது. (ச)

# புதினம் தெரியுமோ?

**வே**லியே பயிரை மேய்ஞ்சமாதிரி கமக்கார அமைப்பே பனையை விழுங்கின சம்பவம் ஒண்டு ஒட்டிசுட்டான், கற்சிலைமடுவில நடந்திருக்கு. வெளியில கனபேருக்கு தெரியாமல் இந்த விசயத்தை அந்த ஏரியாவுக்குப் பொறுப்பான கமக்கார அமைப்பு அமுக்கப் பாக்கிறதால, அதை பட்சி வெளியில கொண்டு வரத்தானே வேணும்.

அங்க இருக்கிற பொதுமகன் ஒராளின்ர வயல் காணிக்குப் பக்கத்தால முத்தையன் கட்டுக் குளத்தின்ர எட்டாம் வாய்க்கால் இருந்திருக்கு. வாய்க்காலுக்கும் காணிக்கும் இடையில விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கான பொதுக்காணி இருக்கு. வாய்க்காலில ஓடுற தண்ணியின்ர வேகத்துக்கு பக்கத்தில உள்ள மண்ணையெல்லாம் அரிச்சுப்போடுமெல்லோ. அப்பிடி சனத்தின்ர காணியை அரிக்காமல் இருக்கவும், வாய்க்காலை பிற்காலத்தில அபிவிருத்தி செய்யிறதுக்கெண்டும்தான் இந்தப் பொதுக்காணி விட்டிருக்கு. எண்டாலும் பொதுக்காணியையும் தாண்டி, வாய்க்கால்ல தன்ர காணியும் அரிபட்டுப் போடுமெண்டிட்டு, அந்தப் பொதுமகன் தன்ர காணி எல்லையில பனை மரத்தை கொஞ்ச வருசத்துக்கு முதல் நட்டிருக்கிறார். இப்ப அதுகள் நல்ல உயரமா வளர்ந்திட்டு. பனையள் காவலுக்கு நிக்கிறதால இனிமேல் வாய்க்கால் தண்ணி தன்ர காணியை அரிக்காது எண்டு அந்தப் பொதுமகன் நிம்மதியா இருக்க, அவற்றை நினைப்பில மண்ணள்ளிப் போட்டிருக்கு கமக்கார அமைப்பு.

அந்த எட்டாம் வாய்க்காலை இப்ப சிமெந்தால கட்டிக்கொண்டு வருகினம். அதால இனிமேல் காணி மண் அரிக்காது. இப்பிடி வாய்க்காலை சிமெந்தால கட்டுறவை வாய்க்காலுக்கெண்டு ஒதுக்கப்பட்ட பொதுக்காணியை மட்டும் பாவிக்காமல், பொதுமகன்ர காணிக்க நிண்ட பனையளிலையும் கைவைச்சிருக்கினம். கமக்கார அமைப்பில முக்கியமான பொறுப்பில இருக்கிற ஒராளுக்கும், இந்தக் காணிக்காரருக்கும் முன்விரோதம் ஏதும் இருக்குமோ எண்டு பொலிஸ்காரர் யோசிக்கிற அளவுக்கு அவரின்ர காணியில நிண்ட ஆறேழு பனையளை எந்த அனுமதியுமில்லாமல் கமக்காரர் அமைப்புக்காரர் வெட்டி விழுத்திப் போட்டினம். ஏனெண்டு கேட்டால், வாய்க்கால் கட்ட இடைஞ்சலா இருக்கெண்டு சொல்லியிருக்கினம்.

உடனேயே காணிக்காரர் தன்ர காணிக்குள்ள நிண்ட பனையை, எந்த அனுமதி இல்லாமல் வெட்டி விழுத்திப்போட்டினமெண்டு எல்லா இடங்களிலையும் முறைப்பாடு செய்ய, அந்தப் பனையளை வெட்டக் கூடாது எண்டு பொலிஸூம் சொல்லியிருக்கு. அதால கொஞ்சநாள் பேசாமல் இருந்திட்டு, இப்ப கொஞ்ச நாளைக்கு முதல் திரும்பவும் அங்க நிண்ட பனையளை வெட்டியிருக்கினம். இப்பவும் ஒரு அனுமதியும் இல்லாமல் தான் வெட்டியிருக்கினம். அதோட பொலிஸ் வெட்டவேண்டாம் எண்டு சொன்ன பிறகும் வெட்டியிருக்கினமெண்டால், அவைக்கும் பனைக்கும் என்ன கோபமோ தெரியேலை. ஒரு பனையை வெட்டுறதெண்டா அதுக்கு அலைஞ்சு திரிஞ்சுதான் அனுமதி வாங்கவேண்டியிருக்கிற காலத்தில, இப்பிடி எல்லைக்கு நட்டுவைச்ச பனையை ஒரு கமக்கார அமைப்பே கண்டபடி வெட்டித்தள்ளியிருக்கு. இதையெல்லாம் ஒருத்தரும் தட்டிக்கேக்க மாட்டினமா? எண்டு அந்தப் பொதுமகன் கேக்கிற கேள்விக்கு ஆர் பதில் சொல்லுவினம்?

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்புமிக்க நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் கப்பல் திருவிழா அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ரி-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னிம் அதிகரிக்கும். குடும்ப விஷயமாக சிறு பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு நண்பர்களிடம் எதிர்பார்த்த பணம் கிடைக்க வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கக்கூடும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். உறவுகளால் நன்மை உண்டாகும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். துர்க்கையை வழிபட காரியங்கள் முடியும்.

**கன்னி:** உறவுகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும். சிறுசிறு குழப்பங்கள் நீங்கும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்புத் தருவார். குடும்பத்தினருடன் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள். விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விநாயகரை வழிபடுவதால் நற்பலன்கள் கூடுதலாகும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்கு தாய்வழி உறவினர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். அனுசரணையாக நடந்துகொள்ளவும்.

# வடக்கில் வீட்டுத்திட்டம்: நிதிமூலத்துக்கு அனுமதி

யாழ்ப்பாணம், செப். 21

வடக்கு மாகாணத்தில் சன் பவர் குழுமத்தால் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள 32 ஆயிரம் வீடுகளுக்கான நிதி மூலத்துக்குரிய அனுமதி கிடைத்துள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட வங்கி ஒன்றின் ஊடாக இந்தத் திட்டத்துக்கான நிதி வழங்கப்படவுள்ளது. தலா 50 இலட்சம் ரூபா செலவில் முற்றுமுழுதாக இலவசமாக பயனாளர்களுக்கு இந்த வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன. வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ள சன் பவர் குழுமத்தால் சுமார் 4 ஆயிரம் ஏக்கர் காணியில் சூரிய மின்கல பூங்கா நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான முழுமையான காணி விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. (ஒ-27)



## நாட்டார் பாடலில் முதலிடம்

கிளிநொச்சி, செப். 21

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்த்தின நாட்டார் பாடல் திறந்த போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி முதலாமிடத்தைப் பெற்று தேசியப் போட்டிக்குத் தெரிவாகியதுடன், இரண்டாமிடத்தை யாழ். ஹாட்லிக் கல்லூரி பெற்றுக் கொண்டது. (ச-45-13)

# வடக்கில் மழைக்கு வாய்ப்பு!

யாழ்ப்பாணம். செப். 21

அடுத்த சில நாள்களுக்கு வெப்பச்சலனம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு மிதமான அளவில் மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

சில இடங்களில் சற்றுக் கனமான மழைக்கும் வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறைத் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் இடிமின்னலுடன் கூடியதாகவே மழை கிடைக்கும் என்பதனால் இடிமின்னல் தொடர்பில் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம்.

எதிர்வரும் 27 ஆம் திகதியளவில் இலங்கைக்குத் தென்கிழக்கே வங்காள விரிகுடாவில் வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. ஆயினும், அடுத்த சில நாட்களின் பின்னரே இதனை உறுதிப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ர-66)

# உபகரணங்கள் கையளிப்பு

கிளிநொச்சி, செப். 21

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின் விளையாட்டுத் துறை மேம்பாட்டுக்காக ஜனகன் அறக்கட்டளையின் அனுசரணையில் சதுரங்க விளையாட்டுக்கான உபகரணங்கள் கடந்த புதன்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.யோகநாதன், சதுரங்க சங்கத் தலைவர் தி.சிவரூபன், இந்துக் கல்லூரி பிரதிஅதிபர் இ.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சமூகவலைத்தளங்களும் சவால்களும்


இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று. காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு ஆரம்பமாகின்றது. மாலை 4 மணிக்கு நிறைவடைகின்றது. பி.ப. 4.15 மணிக்கே தபால்மூல வாக்குகள் எண்ணப்படப் போகின்றன. இன்று நள்ளிரவுக்குப் பின்னர்தான் முன்னணி நிலைமை மக்களுக்குத் தெரியவரும். இம்முறை மும்முனைப் போட்டி என்று சொல்லப்படுவதால் எந்தவொரு வேட்பாளரும் முதல் சுற்றில் 50 சதவீதத்துக்கு மேல் ஒரு வாக்கு பெற்றுக்கொள்ளமாட்டார் என நம்பப்படுகின்றது. ஆனாலும் அதில் அதிசயிக்கத்தக்க மாற்றம் வரலாம் எனவும் எதிர்வுகூறப்படுகின்றது. எது எப்படியாக இருந்தபோதிலும் கடந்த காலங்களில் இலங்கையில் இடம்பெற்ற தேர்தல்களோடு ஒப்பிடுகையில் இம்முறை தேர்தல் சற்று வித்தியாசமாகவே அமைந்திருக்கின்றது.

கடந்த கால ஜனாதிபதித் தேர்தல்களில் பிரதான இரு வேட்பாளர்களுக்கு இடையில்தான் போட்டி நிலவும். இம்முறை அது மும்முனையாக மாறியிருந்தது. ஆனால் ஒப்பீட்டளவில் தேர்தல் வன்முறைகள் நடைபெறவில்லை. தென்பகுதியில் நேற்றுமுன்தினமும் அதற்கு முதல்நாள் இரவு இடம்பெற்ற சூட்டுச்சம்பவங்களும்கூட பாதாள உலகக் குழுக்களின் கைவரிசையாக இருக்கலாம் என்றே சந்தேகிக்கப்படுகின்றது. அதற்கும் தேர்தலுக்கும் தொடர்பு இருப்பதாகத் தகவல்கள் வெளியாகவில்லை. தேர்தல் வன்முறைகள் குறைந்திருந்தாலும் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் பதிவாகியிருக்கின்றன. தேர்தல் வன்முறைகள் குறைந்தமை கூட ஆரோக்கியமான மாற்றமாகப் பார்க்கப்படவேண்டும். கடந்த காலங்களில் ஆளும் கட்சியின் அமைச்சர்களாக இருப்பவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தங்கள் அதிகாரத்தைப் பிரயோகித்து அரச அலுவலர்களுக்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுத்திருந்தார்கள். இம்முறை அந்த வகையிலான அழுத்தங்களும் குறைவாகவே இருந்துள்ளன. மும்முனைப் போட்டியின் விளைவாகக்கூட இவை ஏற்பட்டிருக்கலாம்.

ஆனால் ஆட்சியாளர்களால் தேர்தலில் தாக்கம் செலுத்தக்கூடிய வகையில் அரசாங்கத்தின் அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருந்தன. இவற்றைத் தடுப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் முடியாமல் போயிருந்தது. தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்துக்கு தேர்தல்கள் ஆணைக்குழு பலமுறை அறிவுறுத்தியிருந்தபோதும் அவை கவனத்தில் கொள்ளப்படாமல் அத்தகைய மீறல்கள் தேர்தல் நாளான இன்று வரை தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. தேர்தலில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு வேட்பாளரை ஊக்குவிக்கும் வகையிலும் அல்லது இன்னொரு வேட்பாளருக்கு பாதகத்தை ஏற்படுத்தும் வகையிலும் செயற்படுவது தவறு என்றபோதும், அரசாங்கம் - ஆட்சியாளர்கள் அதைக் கவனத்தில் கொள்ளவில்லை. அல்லது வேண்டுமென்றே அத்தகைய மீறல்களில் ஈடுபட்டிருந்தனர்.

அதேபோன்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு மிகவும் சவாலாக அமைந்த மற்றொரு விடயம் சமூக ஊடகங்கள். அவற்றையும் தேர்தல்கள் ஆணைக்குழுவால் ஓரளவுக்கு மேல் கட்டுப்படுத்த முடியவில்லை. தேர்தல் பரப்புரைகள் கடந்த 18ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தாலும் சமூக ஊடகங்கள் வாயிலான பரப்புரைகள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. அவற்றையும் தேர்தல்கள் ஆணைக்குழுவால் கட்டுப்படுத்த முடியவில்லை.

கடந்த காலங்களைப்போன்று தேர்தல் வன்முறைகள் எதிர்காலத்தில் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவுதான். ஆனாலும் மாற்று வழிகள் ஊடான தேர்தல் விதிமுறை மீறல்களை கட்டுப்படுத்துவதற்கு உரிய ஒழுங்குகள் தேவை. தேர்தல்காலத்தில் அரசாங்கத்தின் அறிவிப்புகள் தேர்தலில் தாக்கம் செலுத்துவதை கட்டுப்படுத்தவேண்டியது கட்டாயத் தேவை. இல்லாவிடின் ஒவ்வொரு தேர்தல்களிலும் ஆட்சியாளர்கள் ஏதாவது ஒரு திருகுதாளங்களைச் செய்துகொண்டிருப்பார்கள்.




# வாக்குச்சாவடிகளில் விசேட கண்காணிப்பு

**கொழும்பு. செப். 21**

**நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் முறைகேடுகள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் விசேட கண்காணிப்புப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.**

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் உள்நாட்டு மற்றும் சர்வதேச தேர்தல் கண்காணிப்புக்குழுக்கள் கடந்த ஒரு மாதகாலமாக தேர்தல் வன்முறைகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் வலுவான கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தல் தினமான இன்றும், வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் நாளையும் தமது குழுவினரை விசேட மனித உரிமைகள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தியிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ச)

## தேர்தல் கடமைகளிலிருந்து 9 அரச அலுவலர்கள் நீக்கம்

றொறண்டோ. செப். 21

அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது அரச அதிகாரிகள் தேர்தல் கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்கள் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவாக செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டிலே தேர்தல் கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

## உற்பத்தித் துறை வளர்ச்சிப்போக்கு

கொழும்பு. செப். 21

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் உற்பத்தித் துறையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மத்தியவங்கி தெரிவித்துள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதத்தில், உற்பத்தித்துறையில் இலங்கை கொள்வனவு முகாமையாளர்க ளின் பார்வையில் 55.5 சுட்டெண் எண்கள் பதிவாகியுள்ளன.

புதிய முதலீடுகள் மற்றும் தயாரிப்புகளின் அதிகரிப்புக்கு உணவு மற்றும் பானங்கள் உற்பத்தித்துறை முக்கியமாக பங்களித்துள்ளது என்றும் மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## தேசபந்து மனு நிராகரிப்பு

கொழும்பு, செப். 21

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றுவதைத் தடுக்கும் இடைக்காலதடை உத்தரவை நீக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட இடையீட்டு மனுவை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

பெல்லன்வில தம்மரதன தேரர், பேராசிரியர் அகலகட சிறிசுமண தேரர் மற்றும் கொட்டபிட்டிய ராகுல தேரர் ஆகியோர் இந்த மனுவை முன்வைத்தனர். இந்த இடையீட்டு மனுவின் உள்ளடக்கம் முதல் பார்வையில் ஒரு வழக்குக்கான ஆதாரம் இல்லாததால் நிராகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## காசநோயாளர் நாட்டில் உயர்வு

கொழும்பு. செப் 21

கடந்த வருடம் பதிவான காசநோயாளிகளின் எண்ணிக்கையில் 46 வீதமானவர்கள் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளதாக காசநோய் மற்றும் மார்பு நோய்களுக்கான தேசிய வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது. அவர்களில் 25 வீதமானவர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். இந்த காசநோயாளிகளின் எண்ணிக்கை இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதாக காசநோய் மற்றும் மார்பு நோய்கள் தொடர்பானதேசிய வேலைத்திட்டத்தின் சமூக சுகாதார வைத்திய நிபுணர் மிசாயா காதர் தெரிவித்துள்ளார்.

பதிவாகியுள்ள காசநோயாளிகளில் பெரும்பாலானோர் ஆண்களாகவும், புகைபிடித்தல் மற்றும் மதுபானம் அருந்துவதே இதற்குக் காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## நாளை

22.09.2024

ஞாயிற்றுக்கிழமை - புரட்டாதி - 06

சுபநேரம் : 09.02- 10.32

ராகுகாலம் : 04.32 - 06.02

## நாளொரு நல்வார்த்தை

**சூரியனாகப் பிரகாசிக்க சந்தர்ப்பம் இருக்கும் போது ஏன் மெழுகுவர்த்தியைப் போல் வெளிச்சம் தர வேண்டும்?**

- நெப்போலியன் ஹில்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகைகளுக்கான அறிவித்தல்
# பிராந்திய சுகாதார சேவைகள்
# பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்
## வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்கான பெறுகை - 2024/2025

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01 | H/LS/2024/01 தொடக்கம் 10வரை | அழுக்குதுணிகள் சலவைச் சேவை | பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, சத்திர சிகிச்சை கூடம் , பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (ஆ)தெல்லிப்பளை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, சத்திர சிகிச்சை கூடம் , பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (இ),சாவகச்சேரி , ஊர்காவற்றுறை, ,கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், ,வேலணை, நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 3000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலை மனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கல் சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்குத் தகைமை பெறுவதற்கு விலை மனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய **சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை யாழ்ப்பாணம்** எனும் முகவரியிலும் 0212223725,0212226253,0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இம் முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தமிழ் மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் 23 செப்ரெம்பர் 2024 ஆம் திகதி தொடக்கம் 08.10.2024 ஆம் திகதி வரை 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 09 ஆம் திகதி ஒக்டோபர் 2024 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 02 ஆம் திகதி ஒக்டோபர் 2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப் பிணைப்பணம் அலுவலக காசாளரிடம் அல்லது வங்கியில் செலுத்தி அவ்வாவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ்விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர்,பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-9971**
**மின்னஞ்சல்: rdhsjaffna15@gmail .com**


(CR/43257) J-1

## 116 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் களத்தில்

கொழும்பு, செப். 21

116 வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இவர்களில் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் 72 பேர். அணிசேரா நாடுகளின் கூட்டமைப்பு கண்காணிப்பாளர்கள் 22 பேர், ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பு கண்காணிப்பாளர்கள் 9 பேர், தெற்காசிய கண்காணிப்பாளர்கள் 7 பேர் உள்ளடங்குகின்றனர்.

(ஒ-6)



## கொக்கட்டிச்சோலைக்கு திருத்தல பாதயாத்திரை

யாழ்ப்பாணம், செப். 21


வரலாற்றுச் சிறப்புமிக்க கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேரோட்டத்தை முன்னிட்டு இலங்கையில் நிரந்தர அமைதி, சமாதானம், இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் உருவாக இறையருள் வேண்டி இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் புனித திருத்தலத் தரிசனப் பாதயாத்திரை நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு திருத்தல தரிசனயாத்திரையை ஆரம்பித்து வைத்தார். குறித்த தரிசன யாத்திரை வவுனியா சென்று அங்கு மேலும் பல அடியவர்களையும் இணைத்துக் கொண்டு திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு சென்று பல ஆலயங்களைத் தரிசித்து மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் தங்கி 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பாதயாத்திரையாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் சென்றடையும். பின்னர் தேரோட்டத்தில் கலந்துகொண்டு நாம பஜனைகளில் ஈடுபட்டு மீண்டும் நல்லூர் திரும்புவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 05 . 1943

மறைவு 16 . 09 . 2024

### பெஞ்சமின் ஜெபரத்தினம் நவரட்ணம்

**(Electrical Contracter)**

ஹற்றனைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பெஞ்சமின் ஜெபரத்தினம் நவரட்ணம் அவர்கள் கடந்த (16.09.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எட்வின் நவரட்ணம் - அன்னலக்சுமி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், நிலான், நிலானி, சுஜந்தன், சுகந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுமதி, குமரேசன், கிருசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் நவரட்ணம், யோகரட்ணம் நவரட்ணம், பிராங் நவரட்ணம் மற்றும் ஜோய் அரியதேவா, தர்மரட்ணம் நவரட்ணம், இமானுவல் நவரட்ணம் (கிருபா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிருத்தி, பிரனீஸ், டிபேஸ், மாதுஸ், திவானி, கேதார் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது மட்டுவில் தெற்கில் உள்ள 'நிலாமனை' இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நலன் விரும்பிகள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

391 A, மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி,
077 266 8636

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 02 . 1931

மறைவு 20 . 09 . 2024

### மங்கையற்கரசி சிவஞானம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வாழ்விடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான மங்கையற்கரசி சிவஞானம் அவர்கள் நேற்று (20.09.2024) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரதம சிறாப்பர் திரு. கந்தையா சிவஞானம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் வேலுப்பிள்ளை நல்லையா - மனோன்மணி தம்பதியரின் பிரிய மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம்பரம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சிவகுமரன் (நோர்வே) மற்றும் சிவநேசன் (ஜேர்மனி), சிவராம், சிவசங்கர் (கனடா), சிவதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜேஸ்வரி, சீக்கிரட், நல்லினி, உஷா, பவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற குமாரதேவா, நரேந்திரா, நடராசா, புனிதவதி, பார்வதி, ஆறுமுகதாஸ் மற்றும் பராசக்தி, கணேசலிங்கம் (சமாதான நீதவான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான Dr.இந்திராணி, அருந்ததி, கோசலா, இராமலிங்கம், சாம்பசிவம், கந்தசாமி மற்றும் திருக்குமாரி, காலஞ்சென்ற சிவப்பிரகாசம் சிவசம்பு, இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவகபிலன், சிமோன், சிவன், ரூபன் - அலைக்ஸ், Dr. சிவமைந்தன்- சரண்யா, சிவநங்கை ஜனுசன், அஞ்சுகன், அகிம்சன் - தபீனா, மோனிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவமித்திரனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2024) ஞாயிற்றுக்கிழமை ரொறன்ரோ கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சிவஞானம் சிவராம் (மகன்)
(ஓய்வு நிலை நீதிமன்றப் பதிவாளர்)
021 223 0549, 077 616 1936

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு.

(CS/56265) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி


### அன்னலிங்கம் கிரிஷாத் (மிராஜ்)

தோற்றம் 21.05.1987

மறைவு 14.10.2022



ஆண்டுகள் இரண்டு ஆனதையா
ஆனந்த வாழ்வும் ஆடிப் போனதையா
புன்னகை பூ ஒன்று உதிர்ந்ததையா
பூத்த உன் கொடிகள் தவிக்குதையா
மீண்டும் பூக்காதோ என்றெண்ணி ஏங்குதையா
நாங்கள் என்றுமே நினைக்கவில்லை ஐயா!
எம் வாழ்வு நிலைமாறி போகுமென்று ஐயா!
காலனின் கட்டளையில்
அமைதியாய் போனதொரு சிரித்த முகம்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



சிவன் வீதி,
பரவைக்குளம், திருநெல்வேலி.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

CS/1399) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**கலைப்பீடம்**
**நான்காம் வருட முதலாம் அரையாண்டு - 2021**
**நான்காம் வருட ,ரண்டாம் அரையாண்டு - 2021**
**மீள்பரீட்சைகள் (பழைய பாடத்திட்டம்)**

- மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கலைப்பீட மாணவர்களிடமிருந்து 23.09.2024 திகதி முதல் கலைப்பீடாதிபதி அலுவலகத்தினால் விநியோகிக்கப்படும்
- விண்ணப்பங்களை கலைப்பீடாதிபதி அலுவலகத்திலிருந்து அல்லது கலைப்பீட இணையத்தளத்திலிருந்து பெற்று. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 30.09.2024 திகதிக்கு முன்னர் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.
- மீள் பரீட்சார்த்திகள் மற்றும் மருத்துவ காரணங்களால் முதல் தடவையாக பரீட்சைக்கு தோற்றும் அனைவரும் ஒரு பாடஅலகிற்கு மீள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 250/- வீதம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**மக்கள் வங்கிக் கணக்கிலக்கம் : 480000022100084**

விண்ணப்ப முடிவுத்திகதியின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மாணவர்கள் கவனத்திற் கொள்ளவும்.

பதிவாளர்.
20.09.024

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**சாரதிகளுக்கான பதவி வெற்றிடங்கள்**

ஹலோ ட்றஸ்ட் நிறுவனமானது ஜக்கிய ராச்சியத்தைத் தளமாகக் கொண்ட உலகின் மிகப்பெரிய சர்வதேச மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் அரசசார்பற்ற நிறுவனமாகும் உலகளாவியரீதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் உயிரைக் காப்பாற்றி வருகிறோம். போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் நிலத்தைப் பாதுகாப்பாக மீட்டெடுக்க உதவுகிறோம். மோதலில் பாதிக்கப்பட்டவர்களின் உயிர்களைப் பாதுகாப்பதும் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதும் எங்கள் நோக்கம்.

ஹலோ ட்றஸ்ட் நிறுவனமானது சாரதிகளுக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது. இப்பதவியின் அத்தியாவசிய சேவைகளாவன, பணிப்பகுதிகளுக்கு அணிகளை கொண்டு செல்வதற்கும் விபத்தொன்றின் போது அம்புலன்ஸ் சேவை வழுங்குவதுமாகும்.

பதவி : சாரதி
சம்பளம் 50,500.00 (after tax, EPF, and ETF)
இடம்: கிளிநொச்சி, கொக்குத்தொடுவாய்
அறிக்கையிடல்: வாகனப்பகுதி முகாமையாளர், உதவி வாகனப்பகுதி முகாமையாளர்,
வேலைச் சுழற்சி : நடவடிக்கை (Ops)

சாரதியின் கடமைகளாவன
- ஹலோ பணியாளர்கள், கருவிகள் மற்றும் பொருட்களை குறிப்பிட்ட இடங்களுக்கு சரியான நேரத்தில் பாதுகாப்பாக கொண்டு செல்வது.
- ஏதேனும் ஏற்றுதல் அல்லது இறக்குதல் கடைமைகளை மேற்கொள்வதற்கு முன் முகவரிகள் மற்றும் பிற போக்குவரத்து விபரங்கள் சரியானவையா என்பதை உறுதி செய்தல்.
- பணியாளர்களின் கருவிகள் மற்றும் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு உதவுதல்.
- போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாற்று வழிகளைப் பயன்படுத்துதல்.
- ஹலோ வாகனங்களை எப்போதும் அனுமதிக்கப்பட்ட வாகனத் தரிப்பிடங்களில் நிறுத்துதல்.
- வாகனங்களை நாளாந்தம் துப்புரவு செய்தல் , கழுவுதல் மற்றும் பராமரித்தல்.
- முதல் வாகன அணிவகுப்புச் சோதனை மற்றும் ஹலோ வாகனங்களின் வழக்கமான சோதனைகளைச் செய்தல்.
- வாகனக் காப்புறுதி மற்றும் வரிகள் உட்பட சட்ட ரீதியான ஆவணங்கள் புதுப்பிக்கப்பட்ட நிலையில் இருப்பதை உறுதி செய்தல்.
- வாகனப்பதிவுப் புத்தகத்தை பராமரித்தல் , கிலோ மீற்றர் போய் வந்த இடங்கள் இறுதி இடங்கள் மற்றும் எரிபொருள் வழுங்கல், பயன்பாடு மற்றும் நுகர்வு உட்பட வேலை நேரத்தை பதிவு செய்தல்.
- ஹலோ வாகனத்தில் போய் வரும் சரியான நேரத்தினைப் பதிவு செய்து வழுங்குதல்.
- ஏதேனும் விபத்துக்கள் காயங்கள் மற்றும் வாகன சேதங்கள் ஏற்படின் சரியான நேரத்திற்கு அலுவலகத்திற்கு அறிவித்தல்.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவைகளை எதிர்வரும் 28 செப்டம்பர் 2024 சனிக்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ, நேரிலோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

**மனிதவள முகாமையாளர்**
**த ஹலோ ட்றஸ்ட் - இலங்கை**
**450, திருநகர் மேற்கு ,கிளிநொச்சி.**

(CR/43258) J-1

**விதைநெல் விற்பனைக்கு**

இயந்திரத்தினால் சுத்திகரிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைத் தரக்கூடிய மூன்று மாத B.G.312 மூன்றரை மாத B.G.34.6 நான்கு மாத B.G. 406 இன விதை நெல் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**077 659 2044**

# 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 18 . 09 . 1942



உதிர்வு 22 . 08 . 2024

கடந்த 22.08.2024 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

**அமரர் ஐயாத்துரை சரஸ்வதி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (21.09.2024) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கத்தாப்படி ஒழுங்கை,**
**நுணாவில் மத்தி,**
**சாவகச்சேரி.**
(CR/43246) J-1
**குடும்பத்தினர்.**

# 9 மாகாணங்களும் கண்காணிப்புக்குள்

கொழும்பு, செப். 21

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் அனைத்து மாவட்டங்களிலும் 32 குறுகிய கால தேர்தல் கண்காணிப்பாளர்களை கண்காணிப்பில் ஈடுபடுத்தியுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு ஆரம்பமாவது, வாக்களிப்பு, வாக்குகள் எண்ணப்படுவது தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுவது போன்றவற்றை கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பர் என ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி தலைமை கண்காணிப்பாளர் இன்டா லசே தெரிவித்துள்ளார். (ச)

# கண்ணீர் அஞ்சலி



**தோற்றம்** **25.06.1961**

**மறைவு** **19.09.2024**

எமது நிறுவனத்தில் கடமையாற்றும்
**செல்வி நீலலோஜினி** அவர்களின்
பாசமிகு சகோதரி

**சற்குணரட்ணம் அருணகுமாரி**

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் **குழுமத் தலைவரும்,**
**பணியாளர்களும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் அட்டை வீடுபுகுந்து பறிப்பு

ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்த இனந் தெரியாத 6 பேர் வீட்டில் இருந்த 3 வாக்காளர் அட்டைகளை வலுக்கட்டாயமாக எடுத்துச் சென்றுள்ளதாக நிவிதிகல பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் எனக் தன்னைக் கூறிக்கொண்ட, கூலி தொழிலாளியாக வாழ்ந்து வருபவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச)

# தேர்தல் முடிவுகள் திரையிடத் தடை




கொழும்பு, செப். 21

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை பொதுவெளியில் திரையிடுவது தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்தார்.

பொதுவெளியில் திரையிடுவதால் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படலாம். எனவே, வன்முறைகளைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை பொதுமக்கள் தங்களது வீடுகளில் இருந்தவாறு தனிப்பட்ட முறையில் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் சகல மணமக்கள் ஜாதகங்களும் போதிய அளவு கைவசம் உண்டு. நீங்கள் விரும்பியவாறு விரைவாக ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு: வி.ஜெயந்தி

T.P:077 9783

## மரண அறிவித்தல்



### வரதராசா சரஸ்வதி (பிள்ளையம்மா)

சுழிபுரம் கிழக்கு சத்தியக்காட்டை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வரதராசா சரஸ்வதி (பிள்ளையம்மா) அவர்கள் கடந்த 19.09.2024 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - ஞானமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அன்னமுத்துவின் பெறாமகளும், காலஞ்சென்ற மாணிக்கம் - தில்லையாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (முத்து), பெரியதம்பி (கடவுள்), செல்வராசா (செல்வம்), பொன்னையா, நாகரத்தினம், தங்கரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், வசந்தி (பிரான்ஸ்), வசந்தன் (பிரான்ஸ்), காந்தன் (பிரான்ஸ்), ஜெயந்தன் (பிரான்ஸ்), ஜெயா (பிரான்ஸ்), ரவி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நந்தன் (பிரான்ஸ்), கீதா (பிரான்ஸ்), மாலா (பிரான்ஸ்), ரம்மியா (பிரான்ஸ்), தீபா ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவிதா, நவிதா, நருசன், அக்சியா, அகன்யா, சுரேஸ், வக்சிகா, வயானா, கன்சிகா, சன்யித், சஞ்ஜய், அயை, அரிஸ், அஸ்வினி, அபிசன், அஸ்விதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் சுழிபுரம் கிழக்கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நலன் விரும்பிகள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புக்கு: 077 977 1995, 033 652 863 176

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வமலர் சிவஞானசுந்தரம்



தோற்றம் 15.10.1924

மறைவு 14.09.2024

யாழ் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto தனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வமலர் சிவஞானசுந்தரம் அவர்கள் கடந்த (14.09.2024) சனிக்கிழமை அன்று இறைவனின் திருவடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற விதானை பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம், சிவக்கொழுந்து பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம் தம்பதியரின் அன்பு நிறை இளைய மகளும், காலஞ்சென்றவர்களான சண்டிலிப்பாயைச் சேர்ந்த கதிரவேலு முத்துக்குமாரு-முத்துக்குமாரு இராசம்மா (சண்டிலிப்பாய் கல்வளைப்பிள்ளையார் கோவிலின் முன்னாள் அறங்காவலர்), தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் முத்துக்குமாரு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினமலர் தாமஸ் போயேஜ் ஹன்ட், இராஜகுலசிங்கம் பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம், அரசகுலசிங்கம் பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம், விஜயகுலசிங்கம் பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம், புஷ்பமலர் நாகரத்தினம், சுகிர்தமலர் கனகசப்பாபதி, யோகமலர் இராஜவல்லவன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், முத்துக்குமாரு ஆறுமுகதாஸ், முத்துக்குமாரு முத்துக்குமாரசூரியர் (பரமானந்தம்) ஞானரஞ்சிதமலர் முத்துக்குமாரசூரியர், மற்றும் காலஞ்சென்றவர்களான இராஜலக்ஷ்மி ஆறுமுகதாஸ், விஜயலக்ஷ்மி தியாகராஜா, எலிசா பேட்டஸ் ஹன்ட், தோமஸ் போயேஜ் ஹன்ட், அமுதவல்லி இராஜகுலசிங்கம், தனலக்ஷ்மி அரசகுலசிங்கம், மார்கிரேட் விஜயகுலசிங்கம், கந்தையா நாகரத்தினம், சுப்பிரமணியம் கனகசபாபதி, பரராஜசிங்கம் இராஜவல்லவன், ஆகியோரின் அன்பு மைத்துனியும், விஜயலக்ஷ்மி சுப்பிரமணியம் (விஜி), சிவகுமார், விஜயகுமார், ஜெயகுமார், காலம்சென்ற இராஜகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுப்பிரமணியம் இரத்தினசிங்கம், கௌரிதேவி விஜயகுமார், ஜெகதீஷ்வரி ஜெயகுமார், வசந்தாதேவி இராஜகுமார், காலம்சென்றவர்களான சாந்தினி சிவகுமார், பிரேமரஞ்சினி விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரசன்னா, சுகன்யா, குபேரன், அபினி, ஆசினி, இரஜீவ்குமார் (பிரேமன்), விமோஷனா, சஞ்சீவ்குமார், உறொஷாந்தகுமார், சாங்கீதா, சகானா, ஆரூரன், ஆர்த்திகன், மற்றும் சுரேஷ், விக்டோரியா, தயானா, ஆரன்யா, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், ஆகாஷ், அஞ்சலி, சச்சின், அர்ஜுன், பிரியன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக இன்று (21.09.2024) சனிக்கிழமை 5:00 PM – 9:00 PM மற்றும் நாளை ஞாயிறு 22 Sep 2024 8:00 AM – 9:30 AM வரை Ajax Crematorium (384 Finley Avenue Ajax ON L1S 2E3 ) இல் வைக்கப்பட்டு, அதன் பின்னர் அதே இடத்தில் கிரிகைகளுடன் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலதிக தொடர்புகளுக்கு:
விஜயலக்ஷ்மி சுப்பிரமணியம் : (416) 805-1592, விஜயகுமார் சிவஞானம் : (647) – 293 - 9924
ஜெயகுமார் சிவஞானம் : (647)-829-8411, வசந்தாதேவி இராஜகுமார் : +49 15566 176806

தகவல் : குடும்பத்தினர்

(CS 1406) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளத் திறக்கப்படும் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்



கொழும்பு, செப். 21
தற்காலிகமாக மூடப்பட்ட ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் எதிர்வரும் செப்ரெம்பர் 24ஆம் திகதி கற்றல் செயற்பாடுகளுக்காக மீண்டும் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
அதன்படி, செப்ரெம்பர் 23ஆம் திகதி முதல் அனைத்து மாணவர்களும் விடுதிகளுக்கு அனுமதிக்கப்படுவர்.
இரண்டு மாணவ குழுக்களுக்கி டையே ஏற்பட்ட மோதல் காரணமாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் அண்மையில் தற்காலிகமாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


## விற்பனைக்கு உண்டு

Yamaha Mate 90 மற்றும் Wego ஆகிய இரு மோட்டார் சைக்கிள்கள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

## கணக்கு பதிவினர் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபலமான நிறுவனத்திற்கு கணக்கு அனுபவம் உள்ள கணக்கு பதிவினர் ஆண், பெண் இரு பாலாரும் தேவை. கீழ்வரும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொலைபேசி இல. **077 7730 567**


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பரிபாலன சபைத்தலைவர் திரு. சிவஞானம் சிவராம் அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் சிவஞானம் மங்கையர்க்கரசி**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய உரும்பிராய் ஒடையம்பதி கற்பக விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை
ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்
உரும்பிராய்

(CS 1404)V-1

## மரண அறிவித்தல்



| | |
|---|---|
| பிறப்பு | இறப்பு |
| 10 . 08 . 1940 | 13 . 09 . 2024 |

### இராஜலட்சுமி செல்வராசா

**(ஆசக்கா)**

இருபாலை **G.P.S.** வீதியை பிறப்பிடமாகவும் தற்போது கன்டா - ஹெறன்றோவை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜலட்சுமி செல்வராசா கடந்த 13.09.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா செலவராசாவின் அன்பு மனைவியும், சுரேஷ் (லண்டன்), மோகன் (கனடா), முரளி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், உதயா, ரூபி, தனுஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா, அன்னரட்ணம், பரமேஸ்வரி, தெய்வேந்திரம், புவனேஸ்வரி, பாலசுப்பிரமணியம் மற்றும் பேரின்பநாயகம் (ராஜன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனுஜா நிருஷன், கிஷோர் டினேஸ், அபி, விஷ்ணு ஆகியோரின் பாசமான பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.09.2024) சனிக்கிழமை 5pm - 9 pm (கனடா நேரப்படி) வரை **Chapel Ridge Funeral Home** (கனடா) இல் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் நாளை (22.09.2024) ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, **Highland Hills Crematorium** இல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**சுரேஷ், மோகன், முரளி**
**(பிள்ளைகள்)**

## மரண அறிவித்தல்



| | |
|---|---|
| மலர்வு | உதிர்வு |
| 20 . 06 . 1962 | 20 . 09 . 2024 |

### கிருஸ்ணசாமி சண்முகலிங்கம் (சிக்கல்)

**(K.A.S புடைவைக்கடை உரிமையாளர்)**

காரைநகர் மாப்பாணவூரியினை பிறப்பிடமாகவும் ஓயார்சின்னக் குளம் வவுனியாவினை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமி சண்முகலிங்கம் அவர்கள் நேற்று (20.09.2024) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி-தெய்வநாயகி தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் அனுசியாவின் பாசமிகு கணவரும் கலைஅனுசன், லோஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயலட்சுமி (அமரர்), கந்தராசா, பத்மநாதன் (அமரர்), யோகேஸ்வரி (அமரர்), சாந்தராணி, ஜெகதீஸ்வரி, விமலராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் ஓயார் சின்னக்குளம் அவரது வீட்டில் நடை பெற்று பூதவுடல் பத்தினியார் மகிழங்குளம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**076 584 7814**
ஓயார் சின்னக்குளம்
வவுனியா.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CR 28448) V-1

## மரண அறிவித்தல்



| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 04 . 03 . 1953 | 18 . 09 . 2024 |

### ஆறுமுகம் தம்பிராசா

பலாலியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தம்பிராசா அவர்கள் கடந்த 18.09.2024 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயரூபன், ஜெயதீபன் (பிரான்ஸ்), ஜெயதீபா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகுமார் (லண்டன்), கார்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பேபி, தேவி (பிரான்ஸ்), சோதிலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராசா, ஐயா (பிரான்ஸ்), ஈஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், ஜெஷான், பவிஷிகா (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நலன் விரும்பிகள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: **குடும்பத்தினர்.**
**070 6188 890**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 தமிழக மீனவர்களுக்கு ரூ. 10 கோடி ரூபா அபராதம்

கொழும்பு, செப். 21
இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 35 நாட்டுப் படகு மீனவர்கள், 10 விசைப் படகு மீனவர்கள் என 45 தமிழக மீனவர்களுக்கு மொத்தம் 10 கோடி ரூபா அபராதம் விதித்து புத்தளம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராமேஸ்வரம் அருகே பாம்பன் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற நான்கு நாட்டுப் படகுகளை கைப்பற்றி அதிலிருந்த 35 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கடந்த ஓகஸ்ட் 8 ஆம் திகதியன்று கைது செய்தனர்.

அவர்களை புத்தளம் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்படுத்தியபோது நீளமான ஒரு நாட்டுப் படகிலிருந்த 12 மீனவர்களுக்கு தலா ரூ. 35 இலட்சம் அபராதமும், மற்ற மூன்று நாட்டுப் படகிலிருந்த 23 மீனவர்களுக்கு தலா ரூ.10 இலட்சம் அபராதமும் விதித்தார். அபராதத்தைக் கட்டத் தவறினால் மூன்று மாதம் சிறைத் தண்டனை விதித்து புத்தளம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், எல்லைதாண்டிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 10 மீனவர்களும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது இந்த 10 மீனவர்களுக்கு தலா ரூ. 35 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத்தைக் கட்டத் தவறினால் ஆறு மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கமைய , 45 தமிழக மீனவர்களுக்கு ரூ.10 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ச)



## கிளிநொச்சியில்
# கால்நடைகள் இறப்பு மாதிரிகள் பகுப்பாய்வு

கொழும்பு. செப். 21
கிளிநொச்சி, பூநகரி கால்நடை மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனைப் பகுதியில் அண்மையநாள்களாக மாடுகள் இறந்து வருகின்ற சம்பவம் அதிகரித்துள்ளது.

இதுவரை 13 கால்நடைகள் வரை இறந்துள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட விலங்கு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சியில் கால்நடைகளின் திடீர் இறப்புக்கான காரணத்தை அறிய மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக கண்டிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-133)

# பணமோசடி; ஒருவர் கைது



முல்லைத்தீவு. செப் 21
பண மோசடியுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தனியார் நிறுவனம் ஒன்றில் விற்பனை முகவராக பணிபுரியும் இவர், சுமார் 10.8 மில்லியன் ரூபா மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## தியாகதீபம்...

சதுக்கம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் முன்றலில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து திலீபனின் நினைவுச் சதுக்கத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. திலீபனின் உருவப்படத்திற்கு முன்பாக வீரச்சாவடைந்த மாவீரர் சிவநேந்திரனின் தாயார் குப்புசாமி சரோஜினி பொதுச்சுடரை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டுத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகள் மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் மலர்கள் தூவி அஞ்சலித்தனர்.

தியாகதீபம் திலீபன் இந்திய அரசிடம் அகிம்சைவழியில் பன்னிரண்டு தினங்கள் நல்லூர்க் கந்தன் ஆலய வடக்கு வீதியில் உணவு தவிர்ப்புப் போரில் ஈடுபட்டு உயிர் நீத்திருந்தார். பன்னிரண்டு தினங்கள் இடம்பெற்ற சம்பவங்களையும், நிகழ்வுகளையும் அப்படியே படம்பிடித்துக் காட்டும் வகையிலும், திலீபன் வரலாற்றை ஆவணப்படுத்தும் வகையிலும் குறித்த நினைவுச் சதுக்கத்தில் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. குறித்த நினைவுச் சதுக்கத்தை திலீபனின் நினைவுநாளான எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை வரை காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை அனைவரும் பார்வையிட முடியுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ம-66-26-125)

## மருத்துவத்...

"வெளிநாடு சென்றுள்ள தமது கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச, நாடாளுமன்றத் தேர்தலை வழிநடத்துவதற்காக வெகுவிரைவில் நாடு திரும்புவார். மருத்துவ பரிசோதனைக்காக வெளிநாடு செல்வதற்கு முன்கூட்டியே பஸில் ராஜபக்ச திட்டமிட்டிருந்தார். எனினும், கட்சியின் வேட்பாளராக நாமல் ராஜபக்ச அறிவிக்கப்பட்டதையடுத்து அவரின் வெற்றிக்காக இரவு, பகல் பாராது உழைத்தார். எமக்கு அறிவித்துவிட்டே வெளிநாடு சென்றுள்ளார். நாடாளுமன்றத் தேர்தலை வழிநடத்துவதற்கு வெகு விரைவிலேயே அவர் நாடு திரும்புவார்" - என்றார். (அ-ம-44)

## தேர்தல்...

தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் தகுதிபெற்றுள்ளனர். நாடு முழுவதிலும் 13 ஆயிரத்து 424 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்காக 40 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தி இருந்தனர். எனினும், 39 பேர் மாத்திரமே வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். அவர்களில் ஒரு வேட்பாளர் உயிரிழந்துள்ளார். எனவே, போட்டியில் 38 வேட்பாளர்கள் உள்ளனர்.

தேர்தலை முன்னிட்டு நாடெங்கும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. நாளையும் பாதுகாப்பு ஏற்பாடுகள் இறுக்கமாக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## எதையும்...

ஜனாதிபதித் தேர்தலின் போதியளவு பாதுகாப்பை வழங்குவதற்கு முப்படைகளும் இணைக்கம் தெரிவித்துள்ளன. தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் பொலிஸ் வீதித்தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. எந்தவொரு அழைப்பு விடுக்கப்பட்டாலும் பொலிஸாருக்கு உதவுவதற்கு ஆயுதப்படையினர் தயார் நிலையில் உள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ச)

## ஸ்ரீலங்கா...

பொருளாதார நெருக்கடி, அரகலய போராட்டம், நாணய நிதியத்தின் கடன்கள் இவ்வாறான விடயங்கள் சர்வதேச ஊடகங்களின் கவனத்தை மிகையாகப் பெற்றிருந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலும் தற்போது அதிகம் கவனிக்கப்படும் விடயமாக மாறியுள்ளது. (அ-ம)

## உத்தியோகபூர்வமற்ற...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"சில சமூக ஊடகங்கள் அதிகாரபூர்வ முடிவுகளை வெளியிடுவதற்கு முன்பு அதிகாரபூர்வமற்ற முடிவுகளை வெளியிடுகின்றன. ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்குகளை எண்ணும் நடவடிக்கை இன்று மாலை 4.15 மணியளவில் ஆரம்பமாகும். வாக்கு எண்ணிக்கை முடிந்ததும் முடிவுகளை ஊடகங்களுக்கு வெளியிட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன" - என்றார். (அ-ச)

## நாட்டை...

அத்துடன், ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவின் மாமியார், இரண்டுபிள்ளைகள் மற்றும் மற்றொரு உறவினர் ஆகியோரும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பிரமுகர்கள் செல்லும் விசேட பாதையூடாக டுபாய் சென்றுள்ளனர். அவர்களும் அங்கிருந்து அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளனர். (அ-ம-44)

## உதயனிடம்...

சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனும், சட்டத்தரணி கே.வி.எஸ். கணேசராஜனும் முன்னிலையாகி பெரும் சட்டப்போராட்டத்தை உதயன் சார்பில் தொடர்ச்சியாக கடந்த 13 வருடங்களாக நடத்தி வந்தனர். இவ்வாறு இடம் பெற்றுவந்த வழக்கே நேற்றையதினம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி சதீஸ்கரனால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. (அ-ம-26)

வீடு வாடகைக்கு
நாச்சிமார் கோவிலுக்கும், கலட்டிச் சந்திக்கும் இடையில் அமைந்துள்ள 3 அறைகள், 2 குளியலறைகள். நவீன வசதிகளுடன் கூடிய புதிய வீட்டின் மேல்பகுதி மட்டும் வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் நடாத்துவதற்கு உகந்தது.
T.P. 0768 245 652
(CS 1397) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
03 - 09 - 1924



மறைவு
18 - 09 - 2024

## சுப்பிரமணியம் நாகம்மா (நாகம்மா மாமி)

காரைநகர், மணற்பிட்டியை பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகம்மா (நாகம்மா மாமி) கடந்த புதன்கிழமை (18.09.2024) தனது 100 ஆவது வயதில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும், அருணாச்சலம்-அன்னபூரணம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, பாக்கியம், பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் அவர்களின் அன்புச் சிறியதாயும் தேவராசா, கெங்காதரன், சோமசேகரன், தவமணி, தவராசா காலஞ்சென்றவர்களான தேவி, அமிர்தலிங்கம் ஆகியோரின் பெரியதாயும் விஜலக்சுமி, தனலக்சுமி, குணலிங்கம், செல்வலக்சுமி காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம், ஜெயலக்சுமி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக 18.09.2024 கிளிநொச்சி மலையாளபுரம் SK முதியோர் இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (21.09.2024) சனிக்கிழமை காரைநகர் மணற்பிட்டி இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் நாளை ஞாயிற்றுக்கிழமை (22.09.2024) அவரது இல்லத்தில் காலை 6.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| தொடர்புகளுக்கு: | 00-94-77 368 2651 |
| தனம் சுவிஸ் | 00 41 76 255 9751 |
| விஜயா இலங்கை | 00 94 76 993 0484 |
| செல்வம் பிரான்ஸ் | 00 3 375 154 7794 |
| சோமன் இலங்கை | 00 9 477 869 6732 |

தகவல்:
S.K. நாதன்

(CR 43095) V-1

## காணி விற்பனைக்கு

- பெரியவிளானில் 23 பரப்புக் காணி விற்பனைக்கு தோட்டக்காணி. காபெற் வீதியிலிருந்து 2 வது காணி) விலை பேசித் தீர்மானிக்கலாம்.
- வசாவிளானில் 56 பரப்புக் காணி விற்பனைக்கு தோட்டம் செய்ய பண்ணை அமைக்க சிறந்த காணி.
- அரியாலையில் 48 பரப்புக் காணி விற்பனைக்கு (குறைந்த விலையில் பண்ணை அமைக்க, சோலர் திட்டத்திற்கு உகந்த காணி)
- தரகர் தேவையில்லை உரிமையாளருடன் நேரடித் தொடர்புக்கு.

077 423 5458
077 262 7581

## நெடுந்தீவுக்கான வாக்குப்பெட்டிகள் அனுப்பிவைப்பு



நெடுந்தீவுக் கான வாக்குப் பெட்டிகள் குறிகாட்டுவான் இறங்குதுறையூடாக நெடுந்தீவு இறங்குதுறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடற்படையினரின் படகு மூலம் பொலிஸார் கடற்படையினரின் பாதுகாப்புடன் அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச-20)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அருகில் உள்ள 3ம் குறுக்குத் தெருவில் வீட்டுடன் அமைந்த 3 பரப்புக் காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
+614 815 34634, 077 751 3687

(CS/1347) J-1

## வீடு வாடகைக்கு தேவை

நான்கு பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு யாழ் நகரை அண்டிய பகுதி TCT கைலாசப்பிள்ளையார் கோவிலடி வைமன் றோட், Brown Road திருநெல்வேலி நல்லூர் அண்டிய பகுதிகளிலும் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு: 077 004 1849

## சமையலாள் தேவை

யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

070 356 7811

(CR/43254) J-1


## வாடகைக்குத் தேவை

யாழ் நகரப் பகுதிக்குள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உணவகம் (Restaurant) ஒன்றிற்கு கடை / வீடு வாடகைக்குத் தேவை.

076 803 5352, 071 924 6420

(CS/55266) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
04.10.1936

மறைவு
16.09.2024

## வீரகத்தி நடராசா

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர் - மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்)

வடமராட்சி கரவெட்டி கிழக்கு கிழவிதோட்டப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், காளியாமூலை வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி நடராசா (ஓய்வு பெற்ற பிரதி அதிபர் - மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்) கடந்த **16.09.2024** அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி - தெய்வானை தம்பதியினரின் மகனும், பரமேஸ்வரியின் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்) அன்புக் கணவரும், இராகுலன் (கனடா), தயாபரன் (அமெரிக்கா), கலாஜினி (ஆசிரியர் - கொழும்பு இராம கிருஷ்ண வித்தியாலயம்), பிரியதர்ஷினி (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலினி (கனடா), சுதாஜினி (அமெரிக்கா), சிவகுமார் (பிரதிப் பணிப்பாளர் நாயகம் - மத்திய சுற்றாடல் அதிகாரசபை), செல்வேந்திரமூர்த்தி (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சோபியா (கனடா), ஐஷன் (கனடா), லவீனியா (அமெரிக்கா), லஷாலி (அமெரிக்கா), மனோஜன் (கொழும்பு), ஆரணி (இலண்டன்), மாதங்கி (இலண்டன்), வர்ஷினி (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு பாட்டனும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலச்சந்திரன் (இலண்டன்), காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், பாலசிங்கம், யோகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று **(21.09.2024)** சனிக்கிழமை அவரின் இல்லத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர், நாளை **(22.09.2024)** ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் ஈமக் கிரிகைகள் நடைபெற்று நுணாவில் மேற்கு, காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நலன் விரும்பிகள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| ராகுலன் (மகன்) | : +1 (416) 666 3021 |
| தயாபரன் (மகன்) | : +1 (408) 674 3305 |
| சிவகுமார் (மருமகன்) | : +94 71 532 8343 |
| கலாஜினி (மகள்) | : +94 77 740 4797 |
| இந்திரன் (மருமகன்) | : +44 7944 965408 |
| பிரியதர்ஷினி (மகள்) | : +44 7852 373847 |

தகவல்:
குடும்பத்தினர்.
இல.24, காளியாமூலை வீதி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி,
+94 21 205 0277

(CS 1128) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.09. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.